## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி - 2016

---

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்து ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இலுள்ள 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்காக வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 7,302,940 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க இடம் பெற்றுள்ள மதிப்பீட்டுத் தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அத்துமீறிக் குடியிருந்த மற்றும் விடுவிக்கப்பட்ட காணிகளை உள்ளடக்கி குத்தகைப் பெறுமதி ரூபா 142,502,287 தொகையான 5,733 ஹெக்டயர் காணிகள் சம்பந்தமாக சுவீகரித்த நபர்களின் பெயர்ப்பட்டியல், காணிகள் தொடர்பான விபரம், காணிகள் விடுவிக்கப்பட்ட தரப்பினர், அதற்கு காரணமான விடயங்கள், காணிகளின் திட்ட வரைபடங்கள், காணப்படுகின்ற இடங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் முதலிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்திகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலையும் காசோட்டத்தையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்ட மற்றும் பணிப்புரைத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் பணிக்கப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தெரிவிக்கிறேன்.

(அ) மேற்கூறிய அபிப்பிராயத்திற்கான அடிப்படை நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள்.

(ஆ) நான் தெரிவிக்கும் அபிப்பிராயம்

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கணக்காய்விற்குத் தேவையான தகவல்களையும் விளக்கமளித்தகவல்களையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன் நான் மேற்கொண்ட பரிசோதனைகளிலிருந்து வெளிப்படுத்துகின்றவாறு கம்பனியால் கணக்கறிக்கைகள் பேணப்படுகின்றன.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்படுகின்ற தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது நட்டமடைந்த ஐந்து அரசாங்க நிறுவனங்களுக்கு 8 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 105 மில்லியன் கடன் பணத்தையும் பெற வேண்டிய ரூபா 14.7 மில்லியன் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1992 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் கம்பனியுடன் இணைந்து தும்பு சார்ந்த உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக 1992 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை ஒரு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. 1995 ஆம் ஆண்டின் போது அத்தனியார் கம்பனி செயற்திட்டத்திலிருந்து விலகியதன் காரணமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 13,325,233 மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2009 மே 26 அந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபார்சுகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களிலிருந்து கனிஷ்ட மட்டத்திலுள்ள முகாமையாளர்களின் உயர்ந்த தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் வரை மீளாய்வாண்டின் போது ரூபா 8,517,042 பணம் ஊழியர் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 69,672,008 மிகையாக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 78,681,922 ஆக இருந்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 9,009,914 வீழ்ச்சி சுட்டிக்காட்டப்படுகின்றது. மீளாய்வாண்டில் தெங்கு வருமானம் 21,702,846 ஆல் குறைவடைந்தமை மற்றும் உயிர் வாழ் சொத்துக்களின் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 19,380,055 ஆல் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டில் ரூபா 62,071,904 பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 77,974,847 தொகையான உயர் நிலையான மிகை 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 69,672,008 ஆக மாறியிருந்தது. நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு, ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி என்பவற்றை மீண்டும் மீண்டும் செம்மையாக்கியதன் பின்னர் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 133,165,888 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 314,991,589 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான களுகஸ்வெவ தோட்டத்தின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட களை பிடுங்கும் நிலத்தின் அளவு 1456 ஹெக்டயர்களாக இருந்த போதிலும் 1004 ஹெக்டயர் அளவான நிலத்தில் மாத்திரம் களை பிடுங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியின் 06 தோட்ட வலயங்களில் உயரமான தென்னை மரங்களின் அளவானது விளைச்சல் தரும் தென்னை மரங்களின் அளவில் 1 சதவீதத்திற்கும் 09 சதவீதத்திற்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. பல ஆண்டுகளாக விழுந்த தேங்காய்களின் சதவீதம் அதிகரித்துக்காணப்பட்டதன் காரணமாக அதற்குப் பரிகாரமாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவ வீதம் ஒரு ஆண்டிற்கு நான்கு தடவை தேங்காய் பிடுங்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து மாதாந்தம் தேங்காய் அறுவடை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் விழுந்த தேங்காய்களின் அளவு 5,180,894 தேங்காய்களாக இருந்ததுடன் இது மொத்த விளைச்சலில் 31 சதவீதமாக இருந்ததனால் அத்தீர்மானம் அமுல்படுத்தப்படுமா என்பது கணக்காய்வில் சிக்கலானதாக இருந்தது.

(இ) ஒரு ஹெக்டயர் காணியில் காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 158 மரங்களாக இருந்த போதிலும் 06 தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் திவுலபிடிய தோட்டத்தை தவிர்த்து எஞ்சிய 05 தோட்டங்களிலும் அந்த எண்ணிக்கை 132 இற்கும் 152 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஈ) முதிர்ச்சியடையாத தென்னை மரங்களை 6 ஆண்டுகளின் பின்னர் முதிர்ச்சியடைந்த மரங்களாக இனங்காணல் கம்பனியின் கொள்கையாக இருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதிர்ச்சியடைந்தவையாக இனங்காணப்பட்ட 414,225 தென்னை மரங்களில் 110,299 தென்னை மரங்கள் அதாவது 27 சதவீதமானவை விளைச்சல் தரும் நிலையில் காணப்படவில்லை.

(உ) இடைப் பயிர் பயிர்ச்செய்கைக்காக போதியளவான பசளை பயன்படுத்துதல், களை பிடுங்குதல், நீர் வழங்குதல் ஆகிய செயற்பாடு திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை திவுலபிடிய தோட்டத்தில் பயிரிடப்பட்ட 7390 மிளகு நாற்றுக்களிலும் 1,175 றம்புட்டான் நாற்றுக்களிலும் முறையே 40 சதவீதம் மற்றும் 50 சதவீதமானவை அழிவடைந்திருந்தன.

**(ஊ) கஹகஸ்வெவ தோட்டம்**

i. 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை களுகஸ்வெவ தோட்டத்தின் 10 காணிகளில் ரூபா 70,312,214 செலவு செய்து கீழ்ப் பயிராக 25,015 தென்னங் கன்றுகள் நடுகை செய்யப்பட்டிருந்தும் அவற்றில் 4353 அளவிலான நாற்றுக்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் அழிவடைந்திருந்தது.

ii. மீளாய்வாண்டின், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் தோட்டத்தில் தேங்காய் பிடுங்குதல் இடம் பெறாத 8 காணிகள் மற்றும் ஒரு தவணை மாத்திரம் இடம் பெற்ற 4 காணிகளை உள்ளடக்கி தேங்காய் பிடுங்கும் 20 தவணைகள் கைவிடப்பட்டதன் காரணமாக இத் தோட்டத்தில் விழுந்த தேங்காய்களின் அளவு 46 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தது.

**(எ) முந்திரிகைப் பயிர்ச்செய்கை**

---

i. மீளாய்வாண்டிற்கான முந்திரிகை வருமானத்தை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,119,667 ஆல் அதாவது 31 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முந்திரிகைப் பயிர்ச் செய்கைக்கான செலவு ரூபா 4,899,099 ஆல் அதாவது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் முந்திரிகைப் பயிர்ச்செய்கையின் மூலம் ரூபா 924,385 தேறிய நட்டம் ஏற்பட்டுள்ளது.

ii. முந்திரிகைப் பயிர் செய்கை பிரதான பயிராக இனங் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தென்னைப் பயிர்செய்கையுடனான நான்கு தோட்டங்களில் துணைப் பயிராக முந்திரிகையை பயிரிடுவதற்காக ரூபா 87,056,399 செலவு செய்திருந்தது. முந்திரிகை மரங்கள் முதிர்ச்சியடைந்தாக இனங்காணும் கம்பனியின் கொள்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளைச்சல் தரக்கூடிய முந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 37,914 ஆக இருக்க வேண்டிய போதிலும் இடைப்பயிராக பயிரிட்டதன் காரணமாக 17,711 முந்திரிகை மரங்கள் மாத்திரம் விளைச்சல் தரும் நிலைக்கு மாறியுள்ளது.

iii. இலங்கை முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் ஒரு முந்திரிகை மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் 10 கிலோகிறாம் அளவிலான உலர்த்திய முந்திரிகையாகும். அதற்கிணங்க கம்பனியின் அனைத்து தோட்டங்களிலும் விளைச்சல் தரும் 20,203 முந்திரிகை மரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட விளைச்சல் 202,030 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் 90,180 கிலோ கிறாம் மாத்திரமாகும்.

**(ஏ) முந்திரிகை செயன்முறைப்படுத்தல் செயற்திட்டம்.**

---

முந்திரிகைக் கைத்தொழிலில் காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் நான்கு கிலோ கிறாம் பச்சை முந்திரிகைகளிலிருந்து ஒரு கிலோ கிறாம் உலர்த்திய முந்திரிகை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் ஒரு கிலோ கிறாம் உலர்த்திய முந்திரிகைக்காக 2014 ஆம் ஆண்டின் போது 4.6 கிலோகிறாம் பச்சை முந்திரிகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டளவில் 5.69 கிலோ கிறாம் வரை அதிகரித்திருந்தது. எனவே உலர்த்திய ஒரு கிலோ கிறாம் முந்திரிகையின் அலகு உற்பத்திக் கிரயம் அதிகரித்ததன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது ஒரு கிலோ கிறாம் உலர்த்திய முந்திரிகையிலிருந்து ரூபா 14 இலாபம் மாத்திரம் கம்பனிக்கு கிடைத்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் மீளாய்வாண்டின் போது 5 தோட்டங்களில் சிறிய கேணிகளை ஆழமாக்கும் மற்றும் விரிவுபடுத்தும் 11 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு அவற்றிலிருந்து கிடைக்கின்ற மணல் மற்றும் மண் விற்பனை செய்வதன் மூலம் ரூபா 72,245,450 வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 23,647,920 வருமானம் மாத்திரம் கிடைத்திருந்தது.

(ஆ) கம்பனியால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருந்த 7 வழக்குகளில் தேங்காய் மற்றும் கொப்பறா மோசடி சம்பந்தமான 03 வழக்குகளுக்கு காரணமான வழக்கு காரணங்களை சான்றுகளுடன் நிரூபிப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததன் காரணமாக 3043 தேங்காய்களுக்கும் 154 கிலோ கிராம் கொப்பராக்களுக்குரிய நட்டத்தை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

### (அ) கால் நடைச் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் ஒரு எருமை மாட்டிலிருந்து ஒரு நாளைக்கு 4 லீற்றருக்கு மேற்பட்ட அளவான பால் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் பளுகஸ்யாய தோட்டத்தின் கால் நடை பண்ணையில் காணப்படுகின்ற மிருகங்களுக்கு நாளாந்தம் உரிய நியம அளவிலான உணவுகள் வழங்காமை மற்றும் 20 ஆண்டுகள் அளவான காலமாக ஒரே பரம்பரைக்கு இடையிலான மிருகங்களே இனப்பெருக்கம் செய்கின்றமை காரணமாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற பாலின் அளவு 1.5 லீற்றர் ஆன ஆகக் குறைந்த அளவினைக் கொண்டிருந்தது.

ii. மீளாய்வாண்டின் போது 31 பசுக்களை மாட்டுத் தொழுவத்திலிருந்து நீக்குவதற்கு (cull) கால்நடை வைத்தியர் சிபார்சு செய்திருந்தும் அக்கால் நடைகளை நீக்குவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### (ஆ) மயிடா ஆய்வுகூடம் - பளுகஸ்வெவ தோட்டம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மயிடா கிருமிநாசினியை உற்பத்தி செய்யும் போது 42 நாட்கள் கடக்கின்ற போது மயிடா பக்கட் ஒன்றில் 5000 அளவிலான மயிடா கிருமிநாசினிகள் இருக்க வேண்டிய போதிலும் உற்பத்தி செயன்முறையில் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் ஆய்வுகூடத்தில் காணப்பட்ட வெப்பநிலை பொருத்தமற்றதன் அடிப்படையில் உரிய அளவில் மயிடாக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையின் பிரகாரம் மயிடா பரவியுள்ள 4 மரங்களிற்கு ஒரு மயிடா கிருமி நாசினி பொதி வீதம் 2 ஆண்டுகள் காலம் முழுவதும் 2-3 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தின் போது ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் தோட்டத்தினால் நியம தரத்தைக் கொண்ட மயிடாக்களை உற்பத்தி செய்யாமை மற்றும் உரிய திகதிகளில் மயிடாக்களை காணிகளுக்கு ஈடுபடுத்தாமையின் காரணமாக தோட்டங்களில் மயிடா பாதிக்கப்பட்ட தேங்காய்களின் அளவு உயர்வடைந்திருந்தன.

### (இ) எண்ணெய் காய்ச்சுதல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2010 ஆம் ஆண்டின் போது எண்ணை காய்ச்சுதல் முறைமையைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 4,850,126 தொகையை ஒரு தனியார் கம்பனிக்குச் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பித்து 5 ஆண்டுகள் மிகைத்திருந்தும் எதிர்பார்க்கப்பட்டவாறு இயந்திரம் செயற்படாததன் காரணமாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் பிரகாரம் 1 கிலோ கிறாம்

கொப்பராவிலிருந்து 0.06 கிலோ கிறாம் எண்ணை பெற்றுக்கொள்ள முடியும் என்ற போதிலும் உரிய இயந்திரங்களிலிருந்து 1 கிலோ கிராம் கொப்பராவிலிருந்து 0.49 கிலோ கிராம் எண்ணை மாத்திரம் கிடைத்ததன் காரணமாக உற்பத்தியிலிருந்து கிடைக்கக் கூடியதாக இருந்த இலாபம் இழக்கப்பட்டிருந்தது.

ii. எண்ணை காய்ச்சும் இயந்திரம் உரிய முறையில் நிறுவப்படாமையின் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை தொடர்புபட்ட தனியார் கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தனியார் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,425,063 தொகை 2014 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது.

iii. ஒரு லீற்றர் தேங்காய் எண்ணையின் நேரடி உற்பத்திக் கிரயம் ரூபா 274 இலிருந்து ரூபா 350 வரை அதிகரித்துச் செல்வதற்கு ஒரு கிலோ கொப்பரா உற்பத்தி செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது தேவைப்பட்ட 7 தேங்காய்களின் அளவு 2016 ஆம் ஆண்டின் போது 8.6 தேங்காய்கள் வரை அதிகரித்துச் சென்றமையும் காரணமாக இருந்தது.

**(ஈ) கப்பருவன இரட்டை உள்ளீட்டு தேங்காய் செயற்திட்டம் - கினியம தோட்டம்**

2013 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டு காலப்பகுதியின் போது இந்த இரட்டை உள்ளீட்டு தேங்காய் உற்பத்திக்காக பெருந்தோட்டக் கம்பனியும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனமும் ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் 58 ஹெக்டெயர்களைக் கொண்ட காணியில் 9,225 தென்னங் கன்றுகளை நடுகை பண்ணுவதற்கு திட்டமிட்டிருந்தும் ரூபா 3,347,323 செலவு செய்து 8,363 தென்னங் கன்றுகள் மாத்திரம் நடுகை பண்ணப்பட்டிருந்தன. அழிவடைந்த நாற்றுக்களுக்காக மீண்டும் நடுகை செய்து உரிய முறைப்படி பயிர்களை மேற்பார்வை செய்யாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5134 தென்னங் கன்றுகள் காணியில் எஞ்சியிருந்தன.

## 4.4 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மாதம்பையிலுள்ள மாகாண தோட்டத்தின் செம்புகட்டிய பகுதியிலுள்ள 2A மற்றும் 2B காணிகளின் இரண்டு கேணிகளிலுள்ள களிமண்ணை அகற்றுவதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டு ஒரு கியூப் ரூபா 600 வீதம் 5,230 கியூப் மண்ணை அகற்றுவதற்காக வெளித்தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக ஏனைய 2 கேணிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 5230 கியூப் மண் அகற்றப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து மண் அகற்றுவது தொடர்பாக ரூபா 3,318,000 பணம் கம்பனிக்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் மீளச் செலுத்த வேண்டிய முற்பணத்தையும் உள்ளடக்கி ரூபா 1,199,900 மாத்திரம் கம்பனிக்கு கிடைத்திருந்தது.

## 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2010 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளின் போது ரூபா 47,582,892 வருமானம் உழைக்கும் எதிர்பார்ப்புடன் 2010 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 469,600 செலவு செய்து பளுகஸ்வெவ தோட்டத்திலுள்ள தும்பு அரைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை 6 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய காலப்பகுதி முழுவதும் அந்த இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 116 மற்றும் 103 ஆக இருந்தன. அதற்கிணங்க 24 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மிகையாக இருந்த பதவியணியினர் எண்ணிக்கை 11 ஆகும். பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஆகக் குறைந்த தகைமைகளைப் பெற்றிருக்காத ஒரு உத்தியோகத்தர் பதிற்கடமை உதவி தோட்ட அதிகாரியாக 2016 செப்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டு ரூபா 506,311 மொத்தத் தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நியமனத்திற்கு எதிராக ஏனைய தோட்ட அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கின் பிரகாரம் இடைக்கால தடைவிதித்தல் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து அவர் சேவைக்கு சமூகமளிக்காதிருந்தும் சட்டரீதியாக அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட டீஎம்எஸ்/ஜீ3/எஸ்3 ஆம் இலக்க 2012 மே 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பதவியணியினர் திருத்தங்களின் பின்னரும் அங்கீகரிக்கப்படாது காணப்பட்ட 11 பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்கு அல்லது பதவிவகிப்பருக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியாக பேணுதல் என்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 கம்பனியைத் தோற்றுவித்தலும் கம்பனியின் உரிமையும்

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சி நிறுவனத்தை பொதுக் கம்பனியாக மாற்றும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட வரையறுத்த பொறுப்புக்களுடனான கம்பனியாக உள்ளதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியாக உள்ளதுடன் கம்பனியின் ஒரேயொரு பங்குதாரர் திறைசேரிச் செயலாளராகும்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்குகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றை நிறைவேற்றும் நடைமுறை பலவீனமான நிலையில் காணப்பட்டமை. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகாலக் கடன் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | தற்போதுள்ள ஊழியர்களில் அதிக அளவானோர் 50 இற்கு மேற்பட்ட வயதுடையவர்களாக உள்ளதுடன் இளம் வேலையாட்களை புதிதாக சேவைக்குச் சேர்த்துக்கொள்ளாதன் காரணமாக எதிர்காலத்தில் புதிய வேலையாட்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய எச்சரிக்கை காணப்படுகின்றது. |
| (ஈ) | பெருந்தோட்ட முகாமைத்துவம் | மீண்டும் தெங்கு பயிர்செய்கை திட்டத்தை அமுல்ப்படுத்தாமை விஞ்ஞான அடிப்படையில் தென்னம் பசளைகளை ஈடுபடுத்துதல் முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றாமை போதியளவான நீர்வழங்கல் முறைமை இல்லாமை என்பவற்றின் காரணமாக பயிரிடப்பட்ட நாற்றுக்கள் அழிவடைந்திருந்தமை ஒரு மாதத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அறுவடை குறைவடைந்தமை என்பன இடம் பெற்றிருந்தன. |